[16th March 1966

பாலங்கள்

*302 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டம் சூணாம்பேட்டிலிருந்து அசப்பூர் போகும் பாதையில், அசப்பூர் ஆற்றில் பாலம் கட்ட திட்டமிடப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) தென் ஆர்க்காடு மாவட் டத்திலுள்ள சூணாம்பேட்டு சாலைக்கு 1/5, 1/7-வது மைல்களில் அசப்பூர் ஆற்றின் குறுக்காகப் பாலங்கள் கட்டும் வேலை நான்கா வது திட்ட முதற்குறிப்பில் சாலைகள் குறித்த செயல் திட்டங்களின் கீழ் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) இவ்வேலை நிதி வசதியைப் பொறுத்து, அதன் முறை வரும்போது நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆ. தங்கவேலு : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது நிதி வசதியைப் பொறுத்து என்று சொன்னார்கள். சென்னையிலிருந்து பாண்டிச்சேரி, கடலூர் போன்ற முக்கியமான பகுதிகளுக்குள்ளாக ஒரு சிறிய மழை பெய்தாலும் அசப்பூர் ஆற்றில் தண்ணீர் வந்து லாரி, பஸ் கார் போக்குவரத்து தடைபடு கிறது. போக்குவரத்தே நின்று விடுகிறது. ஆகவே, தயவு செய்து அதற்கு முதல் இடம் கொடுத்து நிறைவேற்றி ஆவன செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கத்தினர் அவர்களுக்கு இங்கு ஏற்படக்கூடிய நெருக்கடி தெரிந்திருக்கிறது. இன்று ராஜ்யத்தில் பல பாகங்களில் போக்குவரத்துக்குத் தடங்கல் ஏற்படக் கூடிய எல்லா இடங்களையும் அரசாங்கம் மொத்தமாகப் பரிசீலனை செய்து எந்த எந்த இடத்திற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ப்ரயாரிட்டி பிக்ஸ் செய்கிறோம். சில, தேவையைப் பரிசீலனை செய்து நான்காவது திட்டத்தில்கூட சேர்க்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே இதெல்லாம் முறையாகப் பரிசீலனை செய்யப்பட்டு கொடுக்கவேண்டிய ப்ரையாரிடி கொடுத்து நிதி நிலைக்குத் தகுந்தாற்போல் இந்த வேலைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த ஆற்றில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அந்த இரண்டு பிரிவுகளையும் ஒன்றாகச் சேர்த்தே அந்தப் பாலத்தைக் கட்ட திட்டம் போடப்பட்டிருக் கிறதா அல்லது தனித்தனியாக அந்த ஆற்றில் இரண்டு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : மைல் 1/5, 1/7-க்கு இடையில் இருக்கிறது. இரண்டும் ஓர் இடத்தில் சேருகிறதா இல்லையா என்ற விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்கிறேன்.